04/04 2030 ... 28232052 ... P.001/003

தமிழ்நாடு கட்டுமானத்
தொழிலாளர்கள் நல வாரியம்

எண்.8 ...
நுங்கம்பாக்கம், சென்னை—34.
தொலைபேசி: 28255254 & தொலைநகல்:28232052

செ.வெ.எண் . 1050

நாள் . 30.11.2010

# பத்திரிக்கைச் செய்தி – I

## தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய மாவட்ட சென்னை கலந்தாய்வுக் கூட்டம்

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் திட்ட உதவிகள் விரைவாகவும், செம்மையாகவும் தொழிலாளர்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **திரு.பொன்குமார்** அவர்கள் வாரியத் தலைவராக நியமிக்கப்பட்டு **12.06.2009** அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அதன் பின் ஒவ்வொரு மாவட்டமாக சென்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டு, அதனை நிவர்த்தி செய்தும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும் வருகிறார். தொழிற்சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் அனைத்து மாவட்ட வாரிய அலுவலகங்களும் முறையாக ஆய்வு செய்யப்பட்டு, நலத்திட்ட உதவிகளை விரைந்து வழங்கிட அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் திரு.பொன்குமார் அவர்கள் முன்னிலையில் **01.12.2010** அன்று முற்பகல் **10.00** மணியளவில் சென்னை மாவட்டத்தில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில், தொழிற்சங்க பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளை வாரியத் தலைவரிடம் நேரில் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட அலுவலக கலந்தாய்வின் போது கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் திரு.பொன்குமார் அவர்களுடன், வாரியச் செயலாளர் திரு.கி.அழகேசன் அவர்கள், திரு.தர்மசீலன் தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), சென்னை மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

**நிருபர் அனுப்ப கோரல்:**

இச்செய்தியினை தங்கள் மேலான நாளேட்டில் வெளியிட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நிகழ்ச்சிக்கு தங்கள் நிருபர் மற்றும் புகைப்படக்காரரை அனுப்பி வைத்து கூட்டம் தொடர்பான நிகழ்ச்சியினை முழுவதுமாக சேகரித்து செய்தினை நாளேட்டில் வெளியிடவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்

மாவட்ட தொழிலாளர் அலுவலர்
(சமூக பாதுகாப்புத் திட்டம்)
சென்னை

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.